செ.வெ.எண்:13/மே/2019 நாள்:10.05.2019

**திருச்சிராப்பள்ளி அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி, முதலாம் ஆண்டு (முழு நேரம் மற்றும் பகுதிநேரம்) டிப்ளமோவிற்கான விண்ணப்பங்கள் வழங்கப்பட்டு வருகின்றன**

**திருச்சிராப்பள்ளி அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி முதல்வர் மு.தமிழ்ச்செல்வம் அவர்கள் தகவல்.**

----------------

திருச்சிராப்பள்ளி அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி, முதலாம் ஆண்டு (முழு நேரம் மற்றும் பகுதிநேரம்) டிப்ளமோவிற்கான விண்ணப்பங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. விண்ணப்பக் கட்டணம் ரூ.150, SC/ST பிரிவினர் சான்றொப்பமிட்ட சாதிசான்றிதழை கொடுத்து இலவசமாக விண்ணப்பம் பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்த விண்ணப்பங்கள் இக்கல்லூரிக்கு வந்து சேர வேண்டிய கடைசி நாள் 17.05.2019 மாலை 5.45 மணிவரை.

இக்கல்லூரியில் சிவில், மெக்கானிக்கல், எலக்டிரிக்கல், எலக்ட்ரானிக்கல், கம்ப்யூட்டர் ஆகிய 5 பாடபிரிவுகளில் முதல் சுழற்சியும், இரண்டாம் சுழற்சியும் உள்ளது. சர்க்கரை தொழில் நுட்பத்தில் முதல் சுழற்சி உள்ளது. இரு சுழற்சியும் சேர்ந்து மொத்தம் 660 இடங்கள் உள்ளது. முழுநேர டிப்ளமோ படிப்பிற்கு ஆண்டொண்றிக்கு கட்டணம் சுமார் ரூபாய் 2,200 மட்டுமே. மேலும் இக்கல்லூரியில் சேர்ந்து படிக்கும் மாணவ, மாணவியர்கள் தமிழக அரசின் இலவச மடிக்கணிணி, இலவச பஸ் பாஸ், கல்வி உதவித்தொகை. உழவர் பாதுகாப்புத் திட்ட உதவித்தொகை ஆகியவற்றை பெற்று பயன்பெறலாம்.

இக்கல்லூரி சிறந்த கட்டமைப்பு, தகுதி வாய்ந்த ஆசிரியர்கள், தரமான கல்வி மற்றும் ஆய்வக வசதி, சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் போன்ற பல வசதிகள் கொண்டது. இக்கல்லூரியில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான தனித்தனி விடுதி வசதிகள் உள்ளது. திருச்சி தஞ்சை தேசிய நெடுஞ்சாலையில் BHEL அருகில் இக்கல்லூரி அமைந்துள்ளது.

அரசினர் பாலிடெக்னிக் கல்லூரிகளிடையே வாரியத் தேர்வுகளில் சிறந்த தேர்ச்சி விகிதமும், இறுதி ஆண்டில் படிக்கும் போதே கேம்பஸ் இண்டர்வியூ மூலம் அதிகபட்சமாக மாதம் ரூ.30,000 வரை சம்பளம் பெறும் பணிநியமன ஆணையினை பெற்றுத்தரும் இக்கல்லூரியில் சேர்ந்து படித்து பயன்பெறுமாறு 10ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவ, மாணவியர்களை இக்கல்லூரி நிர்வாகம் கேட்டுக் கொள்கிறது.

மேலும் விபரங்களுக்கு முதல்வர் அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி, துவாக்குடி மலை, திருச்சி-22, என்ற முகவரியிலும், தொலைபேசி எண் 0431-2552226, மின்னஞ்சல் gptc_trichy@yahoo.co.in என்ற மின்னஞ்சல் முகவரியில் தெரிந்து கொள்ளலாம். இவ்வாறு திருச்சிராப்பள்ளி அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி முதல்வர் மு.தமிழ்ச்செல்வம் அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு:**

10/5/2019

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருச்சிராப்பள்ளி.**